சொல்லி, அவர் பதில் சொல்வதாக இருந்தால், அவர் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதுபற்றி விவரமாகவே பேசியாகிவிட்டது.

திரு. கு. ரமணி : நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு கேட்க வில்லை.

திரு. கு. ரமணி : நான் மாறுபட்ட கருத்தைச் சொல்ல வில்லை. ஏற்கெனவே உங்களிடம் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் வந்து அறையிலே சொல்லுங்கள். நாளைக்கு பார்க்கலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'என்ன ஆயிற்று' என்பதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்றால், அறையிலே கேளுங்கள்.

3. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு : 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

1987 நவம்பர் 11]

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு நம் முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சூட்டுவது குறித்து எந்த எதிர்ப்பும் நான் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் ஏற்கனவே இந்த அரசாங்கத்தாலே ஒரு உத்தரவு போடப்பட்டிருப்பது, உயிரோடு வாழ்பவர்களுடைய பெயர் களை அரசு நிறுவனங்களுக்கோ அல்லது கட்டிடங்களுக்கோ சூட்டக்கூடாது என்று அரசாங்கத்தினுடைய கொள்கை இருக்கிறது.

(உறுப்பினர் திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் அவர்கள் உட்கார்வது நல்லது.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: 'டிரீட்மெண்டே' சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன மாதிரி 'டிரீட் மெண்ட்' வேண்டுமென்று கேளுங்கள், நான் மாற்றிக்கொள் கிறேன். (குறுக்கீடு) What sort of treatment do you want? ஒரு விதி இருக்கிறது அல்லவா? உட்காருங்கள். ஒரு உறுப்பினர் பேசும்போது இன்னொருத்தர் உட்காரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட இருப்பது குறித்து இங்கே ஒரு அவசரச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னுடைய டெக்னிக்கல் அப்ஜெக்ஷன் என்ன என்று முதலிலே கேட்டால், ஏற்கெனவே அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருப் பதை அவர்கள் அறிவார்கள், உயிரோடு வாழ்பவர்கள் பெயரை அரசு நிறுவனங்களுக்கோ, கட்டிடங்களுக்கோ சூட்டக்கூடாது என்று. அரசாங்கத்தினுடைய டெசிசன், கொள்கை என்றுகூட சொல்லப்பட்டு, ஏற்கெனவே அண்ணாவினுடைய துணைவியார், அண்ணியார் திருமதி இராணி அம்மையார் பெயரிலே இருந்த கல்யாண மண்டபத்திலே இருந்து அவர் பெயர் எடுக்கப்பட்டு, மறைந்த அண்ணா அவர்களுடைய பெயர் வைக்கப் பெற்றது. கலைஞர் அவர்களுடைய பெயர் எடுக்கப்பெற்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தை. உங்க ளுடைய 'வியூ'-வை சொல்லிவிட்டீர்கள். அப்ஜக்ஷன் தானே.

ரொம்ப பேச ஆரம்பித்தால், விவாதம் பெரிதாக ஆகிவிடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கருத்து சொல்லி விடலாம்.

திரு. அ. ரகுமான்கான்: ஒரு அப்ஜக்ஷன்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை யிலே; இதிலே அவ்வளவு பேசவேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் நான் குறுக்கிடுகிறேன். பொதுத் துறையில் இதைப் பார்க்கிற காரணத்தால் நான் அதைப் பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு உத்தரவு போடப்பட்டது உண்மை அது பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு ஒரு உத்தரவு போடப்பட்

(முற்பகல் 11-40)

டிருக்கிறது. ஆனால் அதற்குப் பின்னாலே அந்த உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே பல பெயர்கள் வைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், அரசின் அனுமதி யோடு எந்தெந்தப் பெயரை எங்கே வைக்க வேண்டுமென்று யாராவது கேட்டால் அதற்கு அனுமதிக்கலாம் என்கிற வகையில் உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே போட்ட உத்தரவு ஜி.ஓ. ஆக வந்திருக்கிறது. இது ஆர்டினன்ஸ் ஆக வந்தது. இப்போது பில் ஆக வரும்போது அது தானாக காலாவதியாகிவிடும். அது இதனைக் கட்டுப்படுத்தாது. இருந்தாலும் முன்னெச்சரிக்கையாக, பின்னாலே பல பெயர் களை வைக்க வேண்டுமென்று வந்தபோது, அதை மாற்றிவிட வேண்டுமென்று முடிவு செய்து, அரசு கொள்கை ரீதியாக முடி வெடுத்து அரசின் அனுமதியோடு பெயரை வைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை மட்டும் கூற அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: We have passed that stage of the Agenda அதைக் கடந்தாகிவிட்டது.

திரு. கு. ரமணி: ஒரே ஒரு சப்மிசன்தான் செய்ய வேண்டும். I want to make a submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளைக் கொஞ்சம் பாலோ செய்யுங்கள். என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் * * * நான்தான் முதலில் எழுந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * அந்த வார்த்தையைச் சொல்லக்கூடாது. இப்பொழுது திரு. டி. ஆர். வேங்கடரமணன் பேசுவார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள மின்வாரிய நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட புத்தகத்தில் 15-வது பக்கத்திலிருந்து

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.